This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

www.writersujatha.com

# அடிமைகள்

அங்கம் 1 காட்சி 1

மேடை அமைப்பு–ஒரு பணக்கார எஸ்டேட் பங்களாவின் உட்புறம். பிரிட்டிஷ் காலத்து சமாச்சாரங்கள் பல இருக்கின்றன. ராஜ குடும்பத்தின் படம், ஒரு விக்டரோலா கிராமபோன். சுவரில் ஒரு வேட்டைத்துப்பாக்கி. சிக்கலான கொம்புகளுடன் மான் தலை தரையில் புலித்தலையும் தோலும். பர்னிச்சர் சாமான்களில் எல்லாம் கொஞ்சம் பழைய வாசனை. ஏறக்குறைய சிம்மாசனம் போல் மர வேலைப்பாடுகளுடன் ஒரு நாற்காலி, பழங்காலத்து சோபா ஒன்று மாடிக்குச் செல்லும் படிகள் (வசதிபோல்) ஹாலின் நடுவே மேல் பாகத்தில் மாடி அறைக்கதவு. மெல்லிய திரை போட்டு மூடப்பட்ட ஒரு பெரிய போட்டோ சுவரில் மாட்டப்பட்டிருக்கிறது. மேலும் வரவேற்புப் பத்திரங்கள். துரைமார்களின் பழுப்பு போட்டோக்கள். இடது பக்கம் ஒரு பூட்டின் அறை.

(திரை விலக மேடைக்கு நடுவில் சேகர் நிற்கிறான். 22வயது. எதிர்காலத்தை நோக்குபவன். வசந்தி, 20 வயது. அறையைச்–சுற்றுமுற்றும் ஆச்சர்யத்துடன் வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்கிறாள். துருதுருப்பான பெண். **எ கேர்ள் வித் எ பர்ப்பஸ்.** அவள் கையில் ஒரு சிறு பெட்டி, இந்த வீட்டில் ஒன்றிரண்டு நாட்கள். தங்கப்போகும் உத்தேசத்தைத் தெரிவிக்கிறது.)

நேரம் காலை ஏழு மணி

ஜெனரல் ப்ளட் லைட்டிங்

www.writersujatha.com

சேகர்: (அவன் சட்டையில் பூச்சியைத் தட்டிவிடுகிறான்) கம்பளிப்பூச்சு இந்த எஸ்டேட் பூரா இருக்கும். வகை வகையாப் பூச்சி.

வசந்தி: (சுற்றிலும் பார்த்து) 1979–ல் இந்த மாதிரி ஒரு வீடு...ரெண்டு நாளைக்கு மேல தங்க முடியாது போலிருக்கே?

சேகர்: இந்த வீட்டுக்குள்ள நுழைந்தவுடனே 1938 வாசனை பாரேன்!

வசந்தி: (மூக்கை உறிஞ்சு) விக்டோரியா மஹாராணி வாசனை அடிக்குது. (கிராமபோனைத் தொடுகிறாள்)